Registered as a News Paper in Sri Lanka: பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM **Peoples Daily** மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஞு ஐப்பசி மீ 02 உ வெள்ளிக்கிழமை (19 - 10 - 1990) ஹிஜ்ரி 1411 சபி. அப். 29 ஓசை 234

## மன்னார் மாவட்டத்தில் தபாலகங்கள் இயங்குகிறது

மன்னார் பிரதான அஞ்சலகம் 01 - 10 - 90 இல் இருந்து மீண்டும் காலை 8 மணி முதல்மாலை 4 மணி வரை திறக்கப்பட்டு முடிந்தவரையிலான கருமங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எருக்கலம்பிட்டி, பேசாலை, மடுக்கோயில் அஞ்சலகங்களும் தற்போது இயங்க ஆரம்பித்துள்ளன. தலைமன்னார் அஞ்சலகத்தை பேசாலையில் இயக்குவதற்கான ஒழுங்குகள் நடைபெறுகின்றன. அத்தோடு (4ஆம் பக்கம் பார்க்க)

### வயாவிளான் - குரும்பசிட்டிப்பகுதியில்

# 48 மணிநேர மோதலில் நாற்பதுஇராணுவம்பலி!

## விடுதலைப் புலிகள் பதினைந்து பேர் வீரமரணம்

(வயாவிளான்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நேற்றும், நேற்று முன்தினமும் நடைபெற்ற கடும் மோதலில் நாற்பதிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர். விடுதலைப்புலிகள் தரப்பில் பதினைந்து பேர் வீரமரணம் அடைந்தனர்.

நேற்றுமுன்தினம் விமானப் படையின் உதவியுடன் வயாவிளான் நோக்கி முன்னேறமுயன்ற இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடும் சண்டை மூண்டது. இரண்டு நாட்களாக நடைபெற்ற இக்கடும் சண்டையில் விமானப்படை குண்டு வீச்சு விமானங்கள், அவ்ரோ விமானங்கள், சீனத் தயாரிப்பான வை - 12 ரக விமானம், மூன்று ஹெலிகொப்ரர்கள் என்பன புலிகளின் நிலைகளின்மீது கடும் தாக்குதலைமேற்கொண்டன.

அதேவேளை வாகனங்கள் சகிதம் கால்நடையாக வயாவிளான் நோக்கி இராணுவத்தினர் முன்னேற முற்பட்டனர். இவர்களைத் தடுத்து புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போதே நாற்பதிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

## இரு நாட்கள் மோதலில் 15 புலிகள் வீரமரணம்

வயாவிளான், குரும்பசிட்டிப் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே நேற்றும், நேற்று முன்தினமும் இடம்பெற்ற யுத்தத்தின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் 15பேர் வீரமரணமடைந்துள்ளனர். இந்த யுத்தத்தில் வீரமரணமடைந்த பதின்னான்கு விடுதலைப்புலிகளின் விபரம் வருமாறு;

வீரவேங்கைகள் விக்ரர்(கமலமுத்து பத்மநாதன் புத்தளம்) செல்ரன் (ஜேசுதாஸ் (4ஆம் பக்கம் பார்க்க)

## வலிகாமம் வடக்கில் பரவலான விமானக் குண்டு வீச்சு

(வயாவிளான்)

நேற்று முழுவதும் வலிகாமம் வடக்கின் பல பகுதிகளிலும் வான்மார்க்கத் தாக்குதல்கள் இடம்பெற்றன. இரு பொம்மர்விமானங்களும், இரு அவ்ரோ விமானங்களும், ஒரு வை-12 ரக விமானம் உட்பட ஹெலிகொப்டர்களும் இத்தாக்குதலில் ஈடுபட்டன.

குரும்பசிட்டி, கீரிமலை, காங்கேசன்துறை, மயிலிட்டி, கட்டுவன், தெல்லிப்பளை, வயாவிளான், மல்லாகம் பகுதிகளில் பொம்மர் விமானங்கள் குண்டுகளை வீசின. இவற்றைவிட திருநெல்வேலி, உரும்பராய் பகுதிகளிலும் தாக்குதல்கள் நடைபெற்றன.

நேற்றுப் பகல் முழுவதும் இடையீடுஇன்றி ஹெலிகொப்டர்கள் கலிபர் தாக்குதலை கட்டுவன், குரும்பசிட்டி, தையிட்டி, மயிலிட்டி, குப்பிளான், ஏழாலை வடக்கு, கிழக்கு, குட்டியப்புலம் பகுதிகளில் நடத்தின.

## புகைத்தபடி பலாலியில் தரையிறங்கிய ஹெலி

(வயாவிளான்)

நேற்று மாலை பலாலிப் பகுதியில் தாக்குதலை நடாத்திக் கொண்டிருந்த ஹெலிக்கு கட்டுவன் பகுதியில் வைத்து புலிகள் நடத்திய தாக்குதலால் 4.15 மணியளவில் அது புகைத்தபடி விரைந்து சென்று பலாலியில் தரையிறங்கியது. இதனைத் தொடர்ந்து அப் பகுதியில் 15 நிமிடங்கள் அமைதி நிலவியதைத் தொடர்ந்து மீண்டும் இரு ஹெலிகளும் அவ்ரோ ஒன்றும் இரு பொம்மர்களும் கடும் குண்டு வீச்சில் ஈடுபட்டன.

ஹெலியிலிருந்து கிரனைற் பரவலாக வீசப்பட்டது. இதனால் தெல்லிப்பளை அரசி (4 ஆம் பக்கம் பார்க்க)

## கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் குண்டுவீச்சால் தரைமட்டம்

(கீரிமலை)

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் நேற்று மாலை 2-30மணியளவில் தரைமட்டமாகியது. நேற்று கேதார கௌரிவிரத பூர்த்திவிழா முடிவுறும் தறுவாயில் பெருந்திரளான பக்தர்கள் ஆலயத்தினுள் நிற்க இக் கோரச்சம்பவம் நிகழ்ந்தது. அவ்ரோ வீசிய நான்கு குண்டுகளில் இரண்டு ஆலயத்தினுள்ளும் இரண்டு சீமெந்துத் தொழிற் சாலையினுள்ளும் வீழ்ந்து வெடித்தன.

இதனால் ஆலயத்தின்மூலஸ்தானம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் தரைமட்டமாகின. இதன் தெற்குப்பக்கத்தில் இருந்த தியாகராஜாக் குருக்களின் வீடும், விவசாயக்கந்தோரும், மேற்குப்பகுதியில் இருந்த கிருஷ்ணபிள்ளை மடமும் பலத்தசேதத்திற்குள்ளாயின.

இத் தாக்குதலின்போது (4ஆம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலியில் விமானத் தாக்குதல்

(திருநெல்வேலி)

திருநெல்வேலி சந்தியை அண்டிய பகுதியில் நேற்று முற்பகல் சிறிலங்கா விமானப் படை பொம்மர் விமானங்கள் பலத்த குண்டுத்தாக்குதலை நடத்தின.

இத் தாக்குதலில் ஒருவர் சிறு காயத்திற்குள்ளானார். இப் பகுதியில் இருந்த வீடு (4ஆம் பக்கம் பார்க்க)

## மீராவோடையில் இராணுவம் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட மீராவோடையில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவ தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## உரும்பராயில் குண்டு வீச்சிற்கு 2 பேர் பலி; தேவாலயம் சேதம்

(உரும்பராய்)

உரும்பராயில் நேற்றுக் காலை சிறிலங்கா விமானப் படை விமானங்கள் மேற்கொண்ட குண்டுவீச்சால்மெதடிஸ்ததேவாலயமும் ஞானபைரவர் கோயிலுக்கு முன்பாக உள்ள வீடும் சேதமடைந்தன.

இக் குண்டுவீச்சின் போது ப. நோ. கூ. சங்கத்தில் உணவுப் பொருள்கள் வாங்க வந்து நின்ற செல்வபுரத்தைச் சேர்ந்த இரு பெண்கள் மரணமடைந்தார்கள். மற்றும் ஏழு பேர் காயமடைந்தனர். இதில் ஒருவர் இடிந்த வீட்டிற்குள் இருந்து மீட்கப்பட்டு மானிப் (4ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலியில் அவ்ரோ வீசிய குண்டுகள் வெடிக்கவில்லை

(அச்சுவேலி)

நேற்று அச்சுவேலிப் பகுதியைச் சுற்றி வட்டமிட்ட அவ்ரோ விமானம் இரண்டு பீப்பாக் குண்டுகளை வீசியது. இரண்டு குண்டுகளும் வெடிக்கவில்லை. குண்டுகள் வெடிக்காமையினால் பெருமளவு உயிர், பொருள் சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

ஒருகுண்டு அச்சுவேலிச் சந்தை தற்காலிகமாக செயற்பட்ட வளவிலும் மற்றொரு குண்டு அச்சுவேலி மேற்குக் காலாளைப் பகுதியிலும் விழுந்தது.

குண்டு விழுந்த பகுதியில் (4ஆம் பக்கம் பார்க்க)

### மல்லாகத்தில்

## ஒரு சிறுமி உட்பட இருவர் குண்டுவீச்சிற்கு பலியாகினர்

(மல்லாகம்)

சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் மல்லாகம் பகுதியில் குண்டுவீசித் தாக்கியதில் ஒரு சிறுமி உட்பட இருவர் உயிரிழந்தனர். பல வீடுகள் சேதமுற்றன.

மல்லாகம் ஏழாம் கட்டையில் நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளை வீசி தாக்கியதில் ச. விமலச்சந்திரன் என்ற முப்பது வயது இளைஞரும் சு. சந்திராதேவி என்ற பதினைந்து வயதுச் சிறுமியும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் இத் தாக்குதலில் சு. பத்மாவதி என்ற பன்னிரெண்டு வயதுச் சிறுமியும் காயமடைந்துள்ளனர்.

இத்துடன் மல்லாகம் பகுதியில் பங்களா ஒழுங்கை (4ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு அகதிகள் படகுகள் கடற்படையினால் மூழ்கடிப்பு

(திருக்கோணமலை)

திரியாய் கடற்பகுதியில் படகுகளில் சென்றுகொண்டிருந்த அகதிகள் மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல் நடத்தி இரு படகுகளை மூழ்கடித்ததில் அவற்றில் பயணம் செய்த அனைவரும் கொல்லப்பட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை திரியாய் என்ற இடத்தில் இருந்து செம்மலை நோக்கி ஏழு படகுகளில் சென்று கொண்டிருந்த அகதிகள் மீது கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை நடத்திய போது இரு படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. இதில் பயணம் செய்த அனைவரும் கொல்லப்பட்டனர். ஏனைய படகுகளில் சென்ற அகதிகளை, கடற்படையினர் கைது செய்து முகாமிற்கு அழைத்துச் சென்று பின்னர் விடுதலை செய்தனர்.

## உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தஎதிர்க்கட்சிகள்கோரிக்கை

(கொழும்பு)

உள்ளூர் ஆட்சித் தேர்தல்களை விரைவில் நடத்தவேண்டும் என பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்த இந்த எதிர்க்கட்சிகள், உள்ளூராட்சித்தேர்தல்கள் நடத்தக் கூடிய சாத்தியக்கூறுகள்பற்றி பேச்சுவார்த்தை நடத்தினர்.

விளம்பரம்

**ரதி வோச் வேக்ஸ்**

ரதிவோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல. 14 கஸ்தூரியார் வீதியில் இருந்து இல. 12 பொன்னையா லேன் ஆறு கால்மடம் ஆனைக்கோட்டையில் (பிடாரி கோயில் உப தபால் அலுவலகத்திற்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். திருத்துதல் வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

(B-1459)

**சித்ராலயா ஸ்ருடியோ**

சித்ராலயா நிறுவனத்தில் தரமான போட்டோஸ்ரட் பிரதிகளை 351, கோவில் வீதி நல்லூர் (கம்பன் கோட்டம் முன்பாக) என்ற முகவரியில் காலை 9 மணி முதல் 12 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். மற்றும் மாலை 2 மணி முதல் 5 மணி வரை புகைப் படம் பிடிக்கப்படும்.

(B/ 1496)

**போட்டோஸ்ரட்**

தரமாக எந்த அளவிலும் உடனுக்குடன் எடுத்துக் கொடுக்கப்படும். ஸ்ரீ காந் புத்தகசாலை, நல்லூர் மூன் பக்கம்; மக்மிலன் புத்தக சாலை, ஒட்டுமடம்.

(B/1507)

**நியூ வீனஸ்**
**NEW VENUS**

எமது அன்பான வாடிக்கையாளருக்கு ஒரு வேண்டுகோள் எமது ஸ்தாபனம் 153 A பலாலி வீதியில் (விவசாய பாடசாலை அருகில்)(NEAR FARM SCHOOL) நடைபெறுகின்றது. சகல மணிக் கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு.

(B/1509

**டில்கா வாச் வேக்ஸ்**
**[Dilka Watch Works]**

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக் கோட்டையில் (இராம சபைக் கருகில்) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு.

(B-1510)

## நான்கு மாத சம்பளம் இல்லை

(கிளிநொச்சி)

ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு கடந்த 4 மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை. அதனால் அங்கு கடமையாற்றி வரும் ஊழியர்கள் பெரும் கஷ்டத்தை அனுபவித்து வருகின்றனர்.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டு வரும் இவ் வேளையில் தமக்கு மட்டும் ஒரு மாத சம்பள முற்பணம் மட்டும் வழங்கப்பட்டு, மற்றும் 4 மாதங்கள் சம்பளம் கொடாதிருப்பது தமது தலைமைப் பீடம் தம்மை வேண்டுமென்றே உதாசீனப் படுத்துவதாக சம்பந்தப்பட்ட ஊழியர்கள் கவலை தெரிவிக்கிறார்கள். (49)

## ஊரடங்கால் உணவு இறக்கும் வேலைகள் தாமதம்

(பருத்தித்துறை)

தற்போது யாழ்'குடா நாட்டில் அமுலில் இருக்கும் ஊரடங்கு உத்தரவு காரணமாக பருத்தித்துறை வந்தடைந்திருக்கும் ''குமண'' கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் தடைப்பட்டுள்ளன.

இக்கப்பலில் அத்தியாவசிய பொருள்களுடன் மின்மாற்றிகளுக்குரிய எண்ணெய் வந்துள்ளது. ஆனால் இந்த எண்ணெய் உடன் இறக்கப்படாமையால் யாழ். மாவட்டத்திற்கான மின் விநியோகத்தை மேலும் விரிவுபடுத்த முடியாமல் உள்ளது. (ஈ)

## செயலக திணைக்களங்கள் தனியார் வீடுகளில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கச்சேரி உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளதால் கச்சேரியிலுள்ள பல திணைக்களங்கள் தனியார் வீடுகளிலும், அரசாங்க ஊழியர்கள் தங்கும் விடுதிகளிலும் நடாத்தப்படுகின்றன.

ஊழியர்கள் தங்கும் விடுதிகளில் திணைக்களங்கள் நடாத்தப்படுவதால் அத்திணைக்களப் பொறுப்பதிகாரிகள் பல தொல்லைகளை அனுபவித்து வருகிறார்கள். (49)

## வீட்டுப் பணிப்பெண் 25,000ரூபாவைத் திருடினார்

(யாழ்ப்பாணம்)

வீட்டில் வேலை செய்வதற்காக வைத்திருந்த பணிப் பெண் வீட்டுச் சொந்தக்காரர்கள் இல்லாத வேளையில் பெறுமதி வாய்ந்த பொருள்களைச் சுருட்டிக் கொண்டு வீட்டைக் காலி செய்து விட்டார்.

கோண்டாவிலில் குமாரசூரியர் என்பவரது வீட்டில் பணிப் பெண்ணாகக் கடமையாற்றி வந்த பணிப்பெண் அவரது கணவருடன் இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை வீட்டின் உரிமையாளர் இல்லாத வேளையில் சுருட்டிக்கொண்டு சென்றுள்ளார். (லோ)

## யாழ். செயலகத்தில் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உணவு விநியோகம் சம்பந்தமான ஒன்று கூடல் இன்று வெள்ளிக் கிழமை பத்துமணியளவில் யாழ். செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் யாழ். அரச அதிபர் உட்பட யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர்கள், உதவி உணவு கட்டுப்பாட்டு அதிகாரி, உதவி கூட்டுறவு திணைக்கள ஆணையாளர் ஆகியோருடன் மேலும் உணவு விநியோகத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பங்குபற்றுவர். (லோ)

## விசர் நாய்க்கடி மருந்தும் வந்தது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த கப்பலில் ஒரு தொகுதி விசர் நாய்க்கடி தடுப்பு ஊசி மருந்து வந்து சேர்ந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் கடந்த நான்கு மாத காலப்பகுதியில் இந்த ஊசிமருந்து இல்லாமையினால் பதினைந்துக்கும் மேற்பட்டவர்கள் உயிர் இழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஈ)

## பங்கீட்டுப் பொருள்களில் வேறுபாடு

(வண்ணார்பண்ணை)

தற்போது நடைமுறையில் உள்ள இலவச உணவு விநியோகத்திற்கு வழங்கப்படும் பொருள்களில் பலநோக்கு கூ. சங்கங்களுக்கிடையில் வேறுபாடுகள் காணக் கூடியதாக இருக்கின்றது. யாழ். பல நோ. கூ. சங்கம் 3 அங்கத்தவருக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு 1 கிலோ பருப்பு வழங்குகின்றது. நல்லூர் பல.நோ. கூ. சங்கம் இவர்களுக்கு 100கிறாம் பருப்பு மட்டும் தான் வழங்குகின்றது. இதனால் மக்கள் குறைப்படுகின்றார்கள். (44)

## தீவுப் பகுதிகளில் மினிபஸ் சேவை

(தீவுப்பகுதி)

தீவுப்பகுதி பிரயாணிகளின் நன்மை கருதி தீவுப்பகுதி மினிபஸ் சங்கத்தினால் அராலித்துறைக்கும் புங்குடுதீவுப் பகுதிக்குமிடையே பஸ்சேவையொன்று நடாத்தப்பட்டு வருகிறது.

இரவு வேளையிலே தீவுப் பகுதி படகுச்சேவை அராலியூடாக நடைபெறுவதனால் இந்தபஸ் சேவையும் இரவிலேயே நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (15)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி கந்தசாமி

திரு. சின்னத்தம்பி கந்தசாமி (விகிதர், யாழ். போதனா வைத்தியசாலை) 16 - 10 - 1990 அன்று காலமானார். இவர் திருமதி பாக்கியம் கந்தசாமியின் (அதிபர் றோ.க.த.க.பாடசாலை, ஆனைக்கோட்டை) அன்புக்கணவரும், ஜீவானந்தி பிரபாகர், (இந்தியா) தயானந் (இந்தியா), விஜயானந் (இந்தியா) இவர்களின் அன்புத் தந்தையும், வண. பிரபாகரின் (இந்தியா) மாமனாரும், எல்கி ரெபீலாவின் அன்புப் பேரனும் ஆவார். இவரின் ஈமக்கிரியை 17 - 10 - 90 அன்று மானிப்பாயில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றேன்.

தகவல்
:திருமதி பாக்கியம் கந்தசாமி
(மனைவி)
மானிப்பாய்.

(R/747)

## பெற்றுக்கொள்ளவும்

கீழ்க்காணும் பெயர்களை உடையவர்களின் அடையாள அட்டைகள் 'ஈழநாதம்' காரியாலயத்தில் இருக்கின்றன. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

குணரத்தினம் நடராசா (மட்டுவில்), சின்னம்மா கணபதிப்பிள்ளை (கரணவாய் தெற்கு), சுப்பையா வரதராசா (கௌதாரிமுனை) அழகிப்போடி கமலநாதன் (களுவாஞ்சிக்குடி), பொன்னையா மோகனதாஸன் (யாழ்ப்பாணம்), சின்னசாமி பரமசிவம் (சில்வத்கம), அமிர்தலிங்கம் ஆனந்தகுமார் (வட்டுக் கோட்டை), வரப்பிரகாசம் அருளானந்தம் (யாழ்ப்பாணம்), சுப்பிரமணியம் லில்லி திரேசா (யாழ்ப்பாணம்), சின்னத்தம்பி அருந்தவநாதன் (காங்கேசன்துறை), அருளானந்தம் ஜேசுதாஸன் (மண்டைதீவு), பாலகிருஷ்ணன் ஸ்ரீதரன் (கோண்டாவில்) கிருஷ்ணபிள்ளை அகிலாண்ட நாயகி (அச்சுவேலி), கமலா பாலசிங்கம் (தாவடி), வடிவேற்பிள்ளை வேதநாயகம் (சுன்னாகம்), சுப்பையா மார்க்கண்டு (புங்குடுதீவு), மீனம்மா பாலசிங்கம் (கெக்கிராவ), பூரணலிங்கம் பரமேஸ்வரன் (திருநெல்வேலி), சிவசம்பு சிவலோகநாதன் (மீசாலை), ஜோசப் சேவியர் (கரையூர்), ரங்கநாதன் செல்லத்துரை (தெல்லிப்பளை மாணவர் அடையாள அட்டை) செல்வராஜா சாள்ஸ் மதிவதனன் (திருக்கோணமலை), கனகரெட்ணம் சுமந்தினி (மூளாய்) செல்லத்துரை பாலசுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்), கணபதி மயில்வாகனம் (புலோலி)

## தாயைவிட, தாய் நாட்டை நேசித்தவன் முத்து - தேவர்

(மானிப்பாய்)

முத்து சாதாரண மனிதனாக வாழ்ந்து மடிந்திருந்தால் அவனை இன்று மக்கள் சிந்தித்து இருக்க முடியாது. அவன் தன் தாயைவிட தாய் நாட்டை நேசித்தவன். இதனால் அவன் விடுதலைப் போராளியாக மாறினான். மக்கள் மனங்களில் இடம் பிடித்தான். எனவே தான் மக்கள் இன்று அவனை நினைவு கூருகின்றனர். இவ்வாறு 17-10-90 அன்று மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் இடம் பெற்ற லெப்டினட் அர்ச்சுனன் முத்துவின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகரும், விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினருமான திரு. தேவர் பேசுகையில் குறிப்பிட்டார்.

லெப்டினன்ட் அர்ச்சுனன் முத்து, 1987 இல் இந்தியப் படையுடன் கல்லுண்டாயில் நடந்த மோதலொன்றில் வீர மரணமடைந்தவர். இவரது உருவப்படத்தை மானிப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் திரு. சங்கர் திரைநீக்கம் செய்து வைத்தார். மானிப்பாய் சிற்றூரவைத் தலைவர் பூரணலிங்கம் உருவப்படத்திற்கு மாலை அணிவிக்க, முத்துவின் தாயார் குத்து விளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்.

மேலும் கடையில் காசு கொடுத்து வாங்கும் சுக்கல்ல, மிளகல்ல, சுதந்திரம். அனைத்துமக்களும் இணைந்து செயற்பட்டால் விரைவில் தமிழீழம் எனத் திரு. தேவர் இக் கூட்டத்தில் கூறினார். அத்துடன் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர் குணம், உட்பட அழகரெட்ணம், சிவசுப்பிரமணியம், யோகராசா, செல்வம், செல்வராசா ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினர். திரு. ஆதவன் என்பவரால் கவிதையொன்றும் வாசிக்கப்பட்டது.

## தற்காலிக இடமாற்றம்

ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டடங்கள் குண்டு வீச்சினால் சேதமாக்கப்பட்டதனால் இச்சங்கம் மக்களின் நன்மை கருதி நாரந்தனை என்னுமிடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது. (15)

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு 15 - 10 - 1932

இறப்பு 30 - 10 - 1989

### அம்பலவாணர் இரத்தினசிங்கம்

(ஓய்வுபெற்ற மருந்துக் கலவையாளர்)

திதி 19 - 10 - 1990

ஓராண்டு சென்றாலும்
ஒப்பில்லா எம் தெய்வமே
உன்னை நாம் மறப்போமா
மறந்து இருப்போமா
பொன்னான மேனியிலே
பொல்லாத நோய் வந்து
கந்தன் தினமாம்
கந்த சஷ்டி அன்று
அணைத்து விட்டது
ஆத்மா சாந்திபெற
ஆறுமுகனை வேண்டுகின்றோம்.

'இரத்தினகிரி'
சிவன் வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள்,
மருமகன், பேரன்.

(R-742)

### சிந்தனைக்கு

*வன்முறையால் சுதந்திரம் வீழ்த்தி ஒழிக்கப்பட்டது இதுவரை வரலாற்றிலேயே கிடையாது.*

— ஜேம்ஸ் தாம்சன்

**ஈழநாதம்**

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 19-10-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2203
த. பெ. எண் 05

# தனக்கு வந்தால்தான் தெரியும் தலையிடி

1988 - 1989 ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் காணாமற் போயுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் அரச படைகளினாலும் அரசாங்கத்தின் சட்டபூர்வமற்ற கொலைகாரக் கும்பல்களினாலும் படுகொலை செய்யப்பட்டுவிட்டார்கள் என நம்பப்படுகின்றது.

அரச எதிர்ப்பு செயல்களில் ஈடுபட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களே இவ்வாறு காணாமல் போனவர்களும் படுகொலை செய்யப்பட்டவர்களுமாவர்.

தமிழரின் விடுதலைப் போராட்டத்தை அடக்கவும், தமிழரை இனப்படுகொலை செய்யவும் என பௌத்த சிங்கள அரசாங்கங்களினால், உருவாக்கப்பட்ட அடக்குமுறைச் சட்டங்களாலும், வளர்க்கப்பட்ட இராணுவத்தினராலும், அவர்களுக்குப் பயிற்றப்பட்ட முறைகளாலும் இந்த ஒரு இலட்சம் சிங்கள இளைஞர்களும் படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதே உண்மையாகும்.

தமிழருக்கு எதிராக எனக் கூறிக்கொண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற மனித உரிமைகள் மீறல் சட்டங்களை சிறிலங்கா சிங்கள அரசாங்கங்கள் உருவாக்கிய போதும், தமிழருக்கு எதிராக இராணுவத்தைக்கொண்டு இனப்படுகொலைகளை நடத்திய போதும் தென்னிலங்கை மனித உரிமை ஸ்தாபனங்களோ, முற்போக்குச் சக்திகளோ தமிழருக்காகக்குரல்கொடுக்கவில்லை. தமிழர் விடயத்தில் மாற்றான் தாய் மனப்பான்மையுடனேயே அவர்கள் நடந்து கொண்டனர்.

மனித உரிமைகள் மீறல் சட்டங்கள் உருவாக்கப்பட்ட போது சிங்கள மக்களுக்கும் குறிப்பாக 'சிங்கள முற்போக்குச் சக்திகளுக்கும்' இச் சட்டங்கள் சிங்களவரைத் தாக்குவதற்கும் பயன்படும் என அன்று தமிழரால் எச்சரிக்கப்பட்டபோதும் அவர்கள் அதைக்கண்டுகொள்ளவும் இல்லை, உணரவும் இல்லை.

இன்று இச் சட்டங்களால் சிங்கள இளைஞர்களைக் கொன்று குவித்தபோது, சிங்களமக்கள் மனித உரிமைகள் பற்றிப் பேசத் தலைப்பட்டிருப்பதோடு, அவற்றை எதிர்த்து போராட்டங்கள் நடத்தவும் முற்படுகின்றார்கள்.

அதேவேளை இப் போராட்டங்களை பெண்களே பெரும்பாலும் முன்னெடுக்கின்றார்கள். ஆண்கள் போராட்டம் நடத்த முற்படாத அளவிற்கு அரச பயங்கரவாதம் அவர்களை மிரட்டி வைத்துள்ளது.

இதில் முக்கிய விடயம் என்னவென்றால் சிங்கள ஆட்சியாளர்களால், தமிழருக்கு எதிராக இனவாத நோக்கில் ஆக்கப்பட்ட சட்டங்கள், வளர்க்கப்பட்ட இராணுவம் என்பன தீவிர சிங்கள இனவாதக் கோட்பாட்டை உடையவர்களை அடக்க உதவியதுதான்.

1971 ஏப்ரல் கிளர்ச்சியின் பின் அடங்கிப் போயிருந்த மக்கள் விடுதலை முன்னணியினர் 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து புத்துயிர்ப்பு பெறத் தொடங்கினராயினும், 1987ஆம் ஆண்டு ஏற்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து திடீர் உத்வேகம் பெற்றனர்.

1987ஆம் ஆண்டு ஒப்பந்தம் இந்திய ஆக்கிரமிப்பின் வெளிப்பாடு எனக்கூறி 'சிங்கள தாயக பூமி'யின் ஒரு பகுதி தமிழருக்குத் தாரை வார்க்கப்படுவதற்கு ஒப்பந்தம் வழி செய்கின்றது என்ற பிரசாரங்களை முன்வைத்தனர். அதாவது வெளிப்படையாக இந்திய ஏகாதிபத்தியத்தின் விரிவாக்கம்தான் இந்த ஒப்பந்தம் எனப் பேசியபோதும் மறைமுகமாகத் தமிழருக்கு எதிரான கொள்கையாகவும் முன்வைக்கப்பட்டது.

அதாவது இனவாதத்தை செயலாக்கிவந்த அரசாங்கம் ஆட்சியைத் தொடரமுடியாமல் அதற்கொரு இடைக்காலத் தீர்வைச் சிந்தித்தபோது, அவர்களுக்கும் எதிராக தீவிர இனவாதக் கோட்பாடு மறைமுகமாக முன்வைக்கப்பட்டது. ஆனால் இந்த இனவாதக் கோட்பாடு இனவாத ஆட்சியாளர்களின் கழுத்தை இலக்காகவும் கொண்டிருந்தது. இந்நிலையில் ஆட்சியாளர்களால் இனவாத நோக்கில் உருவாக்கப்பட்ட சட்டங்களும், வளர்க்கப்பட்ட இராணுவமும் தமது இனத்தையே கொன்றொழிக்கப் பயன்படுத்தப்பட்டன.

கொன்றொழிக்கப்பட்டவர்கள் சிங்கள இளைஞர்களாக இருப்பினும், இக்கொலைகளும் சிறிலங்கா அரசாங்கங்கள் கடந்த காலங்களில் கடைப்பிடித்த இனவாதப்போக்கின் எதிர்மறையான விளைவுகளேயாகும்.

# உணவோ, மருந்தோ கிடையாது;
# ஈமக்கிரியைக்கு ரூபா 2,000 இனாம்!

(நேற்றைய தொடர்ச்சி)

அண்மையில் ஊர்காவற்றுறை, காரம்பொன், நாரந்தனை, சரவணை, வேலணை, மண்டைதீவு ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஈவுஇரக்கமற்ற இராணுவ நடவடிக்கைகளினால் படுகாயமடைந்து குற்றுயிராகக் கிடந்து பலநாட்கள் இழுபட்டு பரிதாபமாக நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். பல இடங்களில் உள்ள வைத்தியசாலைகளில் கடுகதி மருத்துவ வண்டி (அம்புலன்ஸ்) வசதி இருந்தும் அவற்றிற்கான எரிபொருள் இல்லாமையால் குற்றுயிராகக் கிடந்த பல உயிர்களை மருத்துவமனைகளுக்கு எடுத்துவர முடியாது போய்விட்டது. இதனால் தேவையற்று அந்த உயிர்கள் உடல்களை விட்டுப்பிரிய வேண்டி ஏற்பட்டது.

அடுத்து வடபகுதிக்கான மிகப்பெரிய மின்மாற்றியான சுன்னாகம் மின்மாற்றி இயந்திரத்தின்மீது சிறிலங்கா விமானங்கள் இரண்டு மாதங்களுக்கு முன்னர் குண்டுகளை வீசிச் சேதப்படுத்தின. இதனைத் தொடர்ந்து வடபகுதி மின்சாரம் தடைப்பட்டது. இது மருத்துவப் பகுதிக்குப் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு மாதத்திற்குள் விசர்நாய்க்கடிமரணம் பன்னிரெண்டாகியது. ஏற்புவலி மரண வீதமும் அதிகரித்தது. பதப்படுத்தி வைக்க வேண்டிய மருந்துப் பொருட்கள் மின்சாரம் இல்லாது பழுதடைந்து போயின. தொடர்ச்சியாக ஏற்ற வேண்டிய பல ஊசி மருந்து வகைகள் நோயாளிகளுக்கு ஏற்றப்படாது போனதால் இந்தநோயாளிகள் உயிர் துறக்க வேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

**தொற்றுநோய்கள்**

சிறிலங்கா இராணுவத்தின் ஷெல் வீச்சைத் தொடர்ந்து எமது பிரதேசத்தில் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறிய மக்கள் அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். இம் மக்கள் மத்தியில் வாந்திபேதி வயிற்றோட்டம்போன்ற பல நோய்கள் பரவி வருகின்றன. பல பாடசாலைப் பிள்ளைகள் இந்நோய்களால் மரணித்து உள்ளனர். இந்த மரணத்திற்கு முக்கிய காரணமாய் இருந்தவை நோயாளர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல முடியாததுடன் இராணுவ அச்சுறுத்தல்கள் இருந்தமையும், தடுப்பு மருந்து வகைகள் முடிந்து போனமையுமேயாகும்.

இந்த மருந்து வகைகளைக் கொண்டுவர சிறிலங்கா அரசுப்படைகள் அனுமதிக்கவில்லை. நோயாளியை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல வாகன வண்டி வசதி இல்லை. அப்படி வாகனங்களில் எடுத்து செல்லப்பட்டாலும் ஹெலித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும் என்ற அச்சமும் இந்த உயிரிழப்புக்கு நேரடிக்காரணங்களாகின.

**மருத்துவ சேவை அழிப்பு**

வடபகுதி மக்களுக்கான மருத்துவ சேவையை முற்றாக அழித்துவிட வேண்டும் என்ற நோக்கம் கொண்ட சிங்களப் படைகள் எமது பகுதி மருத்துவமனைகள் மீது தொடர்ச்சியாக ஷெல், விமானக்குண்டு வீச்சுகளை நடத்தி வருகின்றன.

**லோகன்**

கடந்த ஆகஸ்ட்மாதம் 8ஆம் திகதிக்கு முன்பு கோட்டை முகாமிலிருந்து இடம்பெற்ற ஷெல் எறிகளைத்தொடர்ந்து யாழ். நகரிலிருந்து மானிப்பாய்க்கு இடம் மாற்றப்பட்ட ஒரே ஒரு வடபகுதி போதனா வைத்தியசாலை மீது சிறிலங்கா விமானப்படை விமானங்கள் குண்டுகளை வீசின. பலமுறை ஹெலித்தாக்குதல்கள் நடந்தன; அதே மாதம் இருபத்தியோராம் திகதி பருத்தித்துறை வைத்தியசாலை (மந்திகை) மீது குண்டுகள் வீசப்பட்டன. இவற்றைவிட சாவகச்சேரி, தெல்லிப்பளை, சங்கானை, மூளாய், ஊர்காவற்றுறை, குருநகர் என குடாநாட்டில் உள்ள அத்தனை மருத்துவமனைகள் மீதும் ஹெலித் தாக்குதல்களும் கடல் பீரங்கித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன அல்லது விமானங்கள் ரொக்கட்மோட்டார்களை ஏவின. இவ்வாறு வடபகுதி மருத்துவ சேவையை அழித்து இப்பகுதி மக்களின் உயிரிழப்பை அதிகரிக்கச்செய்வதில் சிறிலங்காப் படைகள் இயன்ற அளவும் முயற்சித்து வருகின்றன.

**உளவியல் தாக்கம்**

கடந்த நான்கு மாத இராணுவ அச்சுறுத்தல்களால் எமது சமூகத்தில் பெரும் உளவியல் ரீதியான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. எமது சின்னஞ்சிறார்களின் மனங்கள் பல ஏக்க நிலைகளுக்கு உட்பட்டுள்ளது. வயோதிபர்கள் பலர் பல்வகை நோயாளிகளாக மாறி உள்ளனர். குறிப்பாக மாரடைப்புநோயாளிகளாகமாறிய வயோதிபர்கள் தொகை அதிகரித்துள்ளது. ஆகவே பொதுவாக எமது சமூகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இது தவிர எமது சமூகத்தில் ஏராளமான பொதுமக்கள் நிரந்தர ஊனமாக்கப் பட்டுள்ளனர். கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் ஐம்பத்திஆறு பொதுமக்களுக்கு ஏதோ ஓர் அங்கம் - அவர்களுடைய உடல்களில் இருந்து அகற்றப்பட்டுள்ளது என வைத்திய குறிப்புகள் அண்மையில் கூறின. இத்தகையநிரந்தர அங்கவீனர்களின் அதிகரிப்பு எமது எதிர்கால சந்ததியில் பெரும் பாதிப்பொன்றை ஏற்படுத்தும் என்பதை சிறிலங்கா அரசு நன்கு உணர்ந்து செயல்படுகின்றது.

ஆகவே தனது நாட்டு மக்களின் ஒருபகுதியினர் என எம்மைக் கூறிக் கொள்ளும் சிறிலங்கா அரசு, எமக்கு ஒரு அற்ப சலுகையை வழங்குவதாக அண்மையில் சுற்று நிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அதாவது அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளால் உயிரிழந்த அரச ஊழியர்களுக்கு அவர்களுடைய ஈமக்கிரியைகளுக்கான செலவாக ரூபா இரண்டாயிரம் இனாமாக தரவுள்ளதாக புனர்வாழ்வு அமைச்சரின் கையெழுத்துடன் அனுப்பி வைத்துள்ள அந்த சுற்றுநிருபத்தில் பெருமையுடன் கூறியுள்ளது.

இதுதான் மனிதாபிமானம் பேசும் சிறிலங்கா அரசு தனது நாட்டின் ஒரு பகுதியில் வாழும் தமிழ் மக்களுக்கு செய்யும் ஒரே உதவியாக அமைந்துள்ளது. (முற்றும்)

### ராம ஜென்ம பூமி – பாபர் மசூதி பிரச்சினையில்

# சட்ட உரிமைகள் எதுவும் எவருக்கும் விட்டுக்கொடுக்கப்படமாட்டாது

— ஜனதாதள் அறிவிப்பு

அயோத்தியாவில் பிரச்சினைக்குரிய இடத்தில் ஆலயம் கட்டுவதில் சட்ட உரிமை எதுவும் விட்டுக் கொடுக்கப்படமாட்டாது என்றும் இதற்காக எந்த விளைவுகளையும் சந்திக்கத் தாம் தயாராக உள்ளதாகவும் ஜனதாதள் கட்சி கூறியிருக்கிறது.

நேற்று முன்தினம் இரவு அவசரமாகக் கூடிய ஜனதாதள் அரசியல் விவகார நிர்வாகக் குழுக் கூட்டத்தின் முடிவில் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஜெயபால் ரெட்டி பத்திரிகையாளர்களுக்கு இதனை தெரிவித்தார்.

இதற்கு முன்னதாக பாரதிய ஜனதாக் கட்சி அயோத்தியாவில் குறிப்பிட்ட இடத்தில் ஆலயம் கட்ட அனுமதிக்காவிட்டாலோ ரதயாத்திரையை தடுத்தாலோ தேசியமுன்னணி அரசாங்கத்திற்கான தனது ஆதரவை விலக்கிக் கொள்ள வேண்டி வரும் எனக் கூறியிருந்தது தெரிந்ததே.

இது தொடர்பாக கூட்டப்பட்ட ஜனதாதள் அவசரக் கூட்டத்தின் முடிவிலேயே சட்ட வரம்புக்கு உட்பட்டு ராமபிரானுக்கு ஆலயம் கட்டுவதில் இந்துக்களின் மன உணர்வுகள் மதிக்கப்படும் என்று உறுதி கூறப்பட்டது.

இதேவேளை பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர், எல். கே. அத்வானி ''பிறந்த இடம் ஒன்று தொடர்பான உணர்வு பூர்வமான விடயம் ஒன்றில் நீதிமன்றம் தீர்ப்புக் கூற முடியாது'' என்று கூறியுள்ளார்.

ஆலயப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமோ சட்டம் ஒன்றினை இயற்றி அந்த அடிப்படையிலேயோ அரசு முயற்சி செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# ஐ.நா. விஜயம் பிற்போடப்பட்டது

(டெல்அவிவ்)

ஜெருசலேத்தில் அண்மையில் நடந்த பாலஸ்தீனர்களின் படுகொலை குறித்து விசாரணை நடத்தச் செல்வதாக இருந்த ஐ.நா. மன்றக் குழுவின் விஜயத்தை ஒத்திப் போட்டுள்ளதாக ஐ.நாவின் தலைமைச் செயலாளர் பெரஸ் டி கொய்லர் அறிவித்துள்ளார்.

ஐ.நாவுக்கான இஸ்ரேலிய தூதுவர் பெரஸ் டி கொய்லரைச் சந்தித்த போது ஜெருசலேத்திற்கு வரவிருக்கும் ஐ.நா. குழுவை தமது அரசு வரவேற்காது என எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து ஐ.நா. குழு இஸ்ரேல் செல்வது ஒத்திப் போடப்பட்டுள்ளதாக இஸ்ரேலின் அரச வானொலி அறிவித்தது.

# அதிகாரிகளின் பொறுப்பற்றசெயலே நிவாரணம் இன்மைக்குக் காரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் உள்ள அத்தனை உத்தியோகஸ்தர்கள் ஊழியர்களுக்கும் உடனடி கஷ்ட நிவாரணப்படி வழங்கப்பட வேண்டும் என அங்கு நேற்று யாழ். குடாநாடு பூராகவும் ஊரடங்குச்சட்டம் போடப்பட்டிருந்த போதிலும் கடமைக்கு வந்திருந்த சில நடுத்தர உத்தியோகத்தர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்த வேண்டுகோள் குறித்து இவர்கள் மேலும் கூறுகையில் தற்போதைய சூழ்நிலையில் தமிழ்ப் பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளதோ இல்லையோ ஹெலிகொப்ரர் தாக்குதலும், குண்டு வீச்சு விமானங்களின் தாக்குதலும் இடம்பெற்ற வண்ணமே இருக்கின்றது. இந்நிலையிலும் எம் போன்ற தூர இடங்களில் இருந்து கடமைக்கு வரும் உத்தியோகஸ்தர்கள் தினமும் அலுவலகத்திற்கு வந்து கையெழுத்திட்டாலே கஷ்ட நிவாரணப்படி வழங்கப்படும் என்று கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று அவர்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

## செயலக ஊழியர்கள் குற்றச்சாட்டு

மேலும்அரசாங்கஉத்தியோகஸ்தர்களுக்கான உலர்உணவு நிவாரணம் குறித்து கூறுகையில் தாங்கள் ஆயிரத்து ஐநூறு ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் பெறுபவர்கள் தான். ஆனால் கடந்த சில மாதங்களாக நாம் ஆயிரம் ரூபா மட்டுமே சம்பளமாக பெற்றோம். அந்த ஆயிரம் ரூபாவுடனேயே ஒரு மாதமும் வாழ்க்கையை ஓட்டி வருகிறோம். இந் நிலையில் எமக்கு நிவாரணமும் வழங்கப்பட முடியாது போனால் எமது அத்தியாவசிய தேவைகளையே பெற்றுக்கொள்ள முடியாது நாம் கஷ்டப்பட வேண்டியுள்ளோம் எனக் கூறினர்.

இறுதியாக அவர்கள் தமது இந்த நிலைமை ஏற்பட முற்று முழுதான காரணம் தமது மேலதிகாரிகளின் பொறுப்பற்றசெயற்பாடுகளே எனக் கூறினர்.

இந்த உத்தியோகஸ்தர்கள் தெரிவித்த ஆட்சேபனைகள் குறித்து யாழ். அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட் கூறுகையில் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கான கஷ்ட நிவாரணப் படியை பெற்றுக் கொள்வது பற்றிய சுற்று நிருபம் எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. ஆனால் அதற்கான ஒதுக்கீட்டுப் பணம் எம்மை வந்தடையவில்லை இப்பொழுது மாதாந்த சம்பளமே ஒழுங்காகக் கொடுக்க முடியாத நிலையில் பணப் பற்றாக்குறை உள்ளது. இந் நிலையில் கஷ்ட நிவாரணம் வழங்குவதற்கு எம்மிடம் எவ்விதம் பணம் இருக்க முடியும் என்றார். அத்துடன் 1500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் கொண்ட அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கான உலர் உணவு நிவாரணம் வழங்குவது பற்றி அத்தியாவசியசேவைகள் நாயகத்திடம் நாம் முறையிட்டுள்ளோம் என்றார் அரச அதிபர். (லோ)

## வீரவணக்கம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலிகள் இயக்கப் போராளி பானு(அருளம்பலம் ரவிச்சந்திரன்) என்பவர் தற்செயலாக ஏற்பட்ட வெடி விபத்தினால்கடந்த புதனன்று வீரமரணமடைந்தார்.

இவருக்கு விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (மு)

## குரும்பசிட்டியில் இருவர் காயம்

(குரும்பசிட்டி)

குரும்பசிட்டி, ஊரங்குளை போன்ற பகுதிகளை நோக்கி சிறிலங்கா விமானப்படையின் வை-12 ரக விமானம் பலத்த தாக்குதலை நடத்தியது.

நேற்றுக்காலை 8.00 மணியளவில் நடந்த இத்தாக்குதலில் நா. குமரகுரு (வயது 16) திருமதி க. புவனேஸ்வரி (வயது 30) ஆகியோர் பலத்த காயமடைந்த நிலையில் மானிப்பாய் போதனா மருத்துவ மனைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்தாக்குதலில் குடிமக்களின் வீடுகள் இலவும் சேதமடைந்தன. (க)

## சமுகம் அளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

இன்று வெள்ளிக்கிழமை பத்தொன்பதாம் திகதி வவுனியா நகர் இலங்கை வங்கிக்கிளையில் கடமையாற்றும் அனைத்து உத்தியோகஸ்தர்களும் தமது அலுவலகத்திற்கு சமுகம் தரும்படி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் வேண்டிக் கொண்டுள்ளார்.

---

**மன்னார்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முருங்கன் அஞ்சலகமும் இம்மாத இறுதிக்குள் இயக்கப்படுவதற்கான வழிவகைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பள்ளிமுனை, தாழ்வுபாடு, தாராபுரம் ஆகிய உப அஞ்சலகங்களும் மக்கள் சேவைக்காக திறக்கப்பட்டுள்ளன.

தபாற் பைகள் இற்றை வரைக்கும் எமக்குக் கிடைக்கப்பெறாததால் தபால் பட்டுவடாவை மேற்கொள்ள இயலவில்லை என்றும் இவைகள் கிடைக்கப் பெற்ற உடனேயே முழு அளவிலான விநியோகம் மேற்கொள்ளப்படும். உள்ளூர் தபால் சேகரிப்பும், பட்டுவாடாவும் தற்போது நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

# கல்வி அமைப்பை மாற்ற செயற்திட்டம் வேண்டும்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைப்பு முறைகள் எமது போராட்டச் சூழலுக்கேற்ப மாற்றிஅமைக்கப்பட வேண்டும் என்றும், அதற்கேற்ப செயல் திட்டங்களும் வகுக்கப்படவேண்டும் என்றும் மாணவர்களை யூனிவேர்சல் கல்வி நிலையம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

நேற்று இக்கல்வி நிலையத்தில் நடைபெற்ற மாணவர்களுக்கான கலந்துரையாடலின் போது இக்கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிறுவனத்தின் இயக்குனரும் தாவரவியல்ஆசிரியருமாகிய ஐங்கரநேசன் குறிப்பிடும்போது இப்போது கல்வித் திட்டங்களுக்கு ஏற்ப கல்வியினைத் தொடர்வது. ஆனால் எமது பேரராட்டத்திற்கு வழிவகுக்கும் செயல் முறைகளையும் மேற்கொள்வதுதான் எமது நிலையத்தின் நோக்கமாகும் என்று குறிப்பிட்டார்.

உதாரணமாகக் குடாநாட்டில் காணப்படும் வெளிகளில் குறிப்பாக வல்லைவெளி, கல்லுண்டாய்வெளி ஆகிய இடங்களில் மரங்களை வைத்துக் காடுகளை உருவாக்குதல்,

விவசாயிகளுக்குத் தேவையான இயற்கைப் பசளைகள் மற்றும் ஏனையதேவைகளைப் பூர்த்தி செய்தல் போன்ற செயற்திட்டங்களை வகுத்தல் போன்றவற்றை எமது நிறுவனம் மேற்கொள்ளும் என்றும் தெரிவித்தார்.

மரபுரீதியான கல்வியினை விட்டு எமது சூழலுக்கேற்ப கல்விகற்கும் முறையை மாற்ற வேண்டும் என பொருளியல் ஆசிரியர் வரதராஜா கேட்டுக் கொண்டார். எமக்கென கல்விக் கொள்கைகள் வகுக்கப்படும்வரை பழைய பாடத்திட்டத்தினை நாம் பயில்வோம். ஆனால் அவற்றைச் செயற்திட்டங்கள் மூலம் செயற்படுத்தவேண்டும் எனக்கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்திற்கு ஆசிரியர்கள், மாணவர்கள், பத்திரிகைத் துறையினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

**கீரிமலை**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கணேசமூர்த்தி (45) கந்தசாமி மாஸ்ரர் (50), சிவசுப்பிரமணியம் இவரஜனி(14) ஆகியோர் உட்பட 10க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இச் சம்பவத்தின்போது வாசலில்நின்ற கணேசமூர்த்தி என்பவர் 15 அடி தூரத்திற்கு தூக்கிவீசப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

---

**புகைத்தபடி**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர் மருத்துவ மனைக்கு அருகில் இரண்டு வீடுகள் பலத்த சேதமடைந்தன.

இதேவேளை காங்கேசன் துறைப்பகுதியில்இருந்து கடற்படைப் பீரங்கிப் படகு ஒன்று மாவிட்டபுரம் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டது.

மாலை 2.00 மணியளவில் புன்னாலைக் கட்டுவன் பகுதியில் நான்கு வீடுகள் பொம்மர் தாக்குதலுக்கு இலக்காகித் தரைமட்டமாகின. (ச)

---

**திருநெல்வேலியில்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றின் கூரைப்பகுதி சிறிது சேதமடைந்தது. பொம்மர் விமானங்கள் இப்பகுதியில் வட்டமிட்டபோதே இப்பகுதி மக்கள் பதுங்கு குழிகளில் தஞ்சமடைந்ததினால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன. (க)

## ஆஸ்பத்திரி இடம் மாற்றம்

தெல்லிப்பளை அரசினர் மருத்துவ மனையின் சகல பிரிவுகளும் நேற்றுக்காலை முதல் சங்கானை அரசினர் மருத்துவமனைக்கு தற்காலிகமாக இடம் மாற்றப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த நான்கு நாட்களாகத் தொடர்ந்து அப்பகுதியில் வான் தாக்குதல்கள் அதிகளவில் இடம் பெறுவதினாலும் இவை மருத்துவ மனையில் சேதங்களை ஏற்படுத்தி இருப்பதுமே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# கட்டுவன் வயாவிளானில் ஹெலியினால் 2 பேர் காயம்

(வயாவிளான்)

வயாவிளான், கட்டுவன் குரும்பசிட்டி, ஊரங்குளை ஆகிய பகுதிகளில் சிறிலங்கா விமானப்படை ஹெலிகொப்டர்கள் நடத்திய தாக்குதல்களில் பலர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு நடத்திய ஹெலியின் ரொக்கட் தாக்குதலில்கட்டுவனைச் சேர்ந்த சி. அருளம்பலம் (வயது 57) காயமடைந்தார். இத்தாக்குதலில் வீடு ஒன்றும் சேதமடைந்தது. நேற்றுமுற்பகல் நடந்த தாக்குதலில் வயாவிளானைச் சேர்ந்த திருமதி வி. மாணிக்கம் (வயது 55) காயமடைந்தார் (க)

## விசர் நாய்க்கடி சம்பந்தமான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

விசர்நாய்க்கடி நோய் சம்பந்தமான கூட்டம் ஒன்று கோண்டாவிலில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தில் இன்று (வெள்ளிக்கிழமை) காலை 9-00 மணிக்கு நடைபெற உள்ளது.

இக் கூட்டத்திற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் சகல எம். ஓ. எச். எஸ். பி. எச். ஐ. பி. எச். ஐ ஆகியோரை 1990 ஆம் ஆண்டில் மேற்கொண்ட இந்த வேலைகள் தொடர்பான விபரங்களுடன் கலந்துகொள்ளுமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுக் கொள்கிறார்.

## இரு படையினர் கால்களை இழந்தனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிண்ணையடி என்ற இடத்தில் விடுதலைப்புலிகளின் மிதிவெடியில் சிக்கிய ஒரு பொலிசாரும், ஒரு இராணுவமும் தமது கால்களை இழந்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இப்பகுதிக்கு தேடுதல் நடத்துவதற்கு படையினர் வந்த போதே இம்மிதிவெடியில் அகப்பட்டனர். (க)

---

**இருநாங்கள்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்ரனி யூனைற் நாவாந்துறை, யாழ்ப்பாணம்) ஐயர் (பாலசுப்பிரமணிய சர்மா சுந்தர் ராஜ சர்மா, புத்தூர்) இராசிக் (சிறிபாலசுப்பிரமணியம் அன்பழகன் பருத்தித்துறை) இசோபன் (செல்லையா சற்குணானந்தன் கோப்பாய்) நெசன் (ஸ்ரீ பூநகரி) ரகீம் (சாவகச்சேரி) கந்தையா (கந்தசாமி உதய குமார் கரவெட்டி) தமிழ்ச் செல்வன் (மன்னார்) மரியதாஸ், டானியல் (கிருஷ்ண பிள்ளை நகுலேஸ்வரன் சுழிபுரம்) நசார்,ரகு (கந்தசாமி அளவெட்டி) வீரவேங்கை விக்ரரின் பூதவுடல் புங்கங்குளம் றேடியன்ற் கல்விநிலையத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கோட்டை மைதானத்தில் தகனம் செய்யப்பட்டது. ஏனைய வீரவேங்கைகளின் பூதவுடல்பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, அவரவர் சொந்தஇடங்களுக்கு பொதுமக்கள் அஞ்சலிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவர்கள் அனைவருக்கும் புலிகள் தமது வீரவணக்கத்தை செலுத்தியுள்ளனர்.

---

**மீராவோடையில்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த செவ்வாய்க்கிழமை இப்பகுதியில் விடுதலைப்புலிகளை சுற்றி வளைத்து சிறிலங்கா இராணுவம் தாக்க முற்பட்டபோது விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதலை நடத்தியபோதே இவர் கொல்லப்பட்டார். (க)

## ஹெலி தாக்கி இருவர் காயம்

(சாவகச்சேரி)

மீசாலையில் வீதியால் சென்று கொண்டிருந்த வாகனமொன்றின் மீது கடந்த புதனன்று ஹெலியிலிருந்து கலிபர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத் தாக்குதால் இருவர் காயமடைந்தனர். தென்மராட்சிப் பகுதியில் தற்போது விமானங்களினதும், ஹெலிகளினதும் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் மக்கள் பீதியடைந்துள்ளனர். நேற்றுக் காலையும் சாவகச்சேரி சந்தைப் பகுதியில் வை - 12 ரக விமானம் பலமுறை வட்டமிட்டுச் சென்றது. (மு)

## சடலங்களை அடையாளம் காட்டுக

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமடைந்த இருவரின் பூதவுடல்கள் விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டு சுன்னாகம் பிரதேசக் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் வந்து சடலங்களை இனங்காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கோரியுள்ளது.

## ஊர்காவற்றுறை வைத்தியசாலை புளியங்கூடலில்

(தீவுப்பகுதி)

ஊர்காவற்றுறைப் பகுதி மக்களின் சுகாதார வசதி கருதி ஊர்காவற்றுறை மாவட்ட அரசினர் ஆஸ்பத்திரி தற்போது புளியங்கூடல் -சுருவில் வீதியில் தற்காலிகமாக இயங்கத் தொடங்கியுள்ளது.

அண்மைக்கால தீவுப்பகுதியின் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கடந்த இரு மாதங்களுக்கு மேலாக இந்த ஆஸ்பத்திரி இயங்காமல் மூடப்பட்ட நிலையில் இருந்து வந்தது.

யாழ். மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகர் இந்த ஆஸ்பத்திரியை உடனடியாக இயங்க வைத்து தீவுப்பகுதி மக்களுக்குச் சேவையாற்றும்படி பணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (15)

---

**ஒரு சிறுமி**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்னும் இடத்தில் நேற்று விமானங்கள் குண்டுகளை வீசின. இதில் ஒரு மரக்காலை சேதமுற்றது. (83)

---

**அச்சுவேலியில்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குண்டில் நிரப்பப்பட்ட இரசாயனப் பொருள்கள் சிதறுண்டு காணப்பட்டது. விடுதலைப் புலிகளினால் குண்டுகள் மீட்கப்பட்டன. (16)

---

**உரும்பராயில்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாயில் உள்ள யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். அவரின் நிலை மோசமாகவுள்ளது.

நேற்று முன்தினம் இப்பகுதியில் ஹெலிக்கொப்ரர் மேற்கொண்ட தாக்குதலினால் ஞானபைரவர் சனசமூகநிலையமும், முறைசாராக் கல்விப் பிரிவின்முதலுதவி நிலையமும் அதன் முன்நின்ற லொறியின் கண்ணாடியும் சேதமடைந்தன. (32)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 19ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.